தி.மு.க. மகளிர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

20 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒரத்தநாடு தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ப. அன்னக்கிளி கீழத் தெரு, கண்ணுக்குடி கிழக்கு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) மு. வனிதா குடிக்காடு, ஆம்லாப்பட்டு தெற்கு, ஒரத்தநாடு தஞ்சாவூர். 2) செ. அபிராமி தெற்கு தெரு, திருமங்கலக்கோட்டை மேற்கு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 3) செ. சரிதா சோழகன்குடிகாடு, ஆவிடநல்விஜயபுரம், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 4) வி. சூரியகலா கிழக்கு தெரு, வெள்ளூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 5) ஆ. சங்கீதா பிரியா வாண்டையார் தெரு, திருமங்கலக்கோட்டை, கீழையூர், தஞ்சாவூர்.

ஒரத்தநாடு கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ரா. கலையரசி கீழ்வன்னிப்பட்டு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) சே. தாமரைச்செல்வி புதூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 2) மு. மகேஷ்வரி ஒக்கநாடு மேலையூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 3) செ. சசிகலா கண்ணந்தங்குடி, மேலையூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 4) ரா. சியமளா ஒக்கநாடு, கீழையூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 5) ரா. தமிழ்இலக்கியா பூவத்தூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.

ஒரத்தநாடு மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ஜோ. ரோகிணி நடுநகர், வடக்கூர் தெற்கு, ஒரத்தநாடு, தஞ்சாவூர் - 614902. துணை அமைப்பாளர்கள் - 1) ரா. ராஜதிலகவதி நடுத் தெரு, சேதுராயன்குடிகாடு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 2) சே. கற்பகம் எத்திரகார தெரு, பாச்சூர், ஒரத்தநாடு, தஞ்சாவூர். 3) இ. ராதா செப்பரித்தோப்பு, கருக்காடிப்பட்டி, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 4) மு. வீரச்செல்வி கோட்டைத் தெரு, தெக்கூர் மேற்கு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 5) ரா. ராணி ஆதிதிராவிடர் தெரு, கக்கரைக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர்.

திருவோணம் வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - சே. வனிதா வடக்கு தெரு, வடக்குகோட்டை, திருவோணம், தஞ்சாவூர் - 614904 துணை அமைப்பாளர்கள் - 1) கு. விஜயா கீழமேட்டுப்பட்டி, திருவோணம், தஞ்சாவூர். 2) ரா. வள்ளி வடக்குதெரு, அக்கரைவட்டம், திருவோணம்,தஞ்சாவூர். 3) கோ. காளியம்மாள் அம்பலகாரத் தெரு, மணிக்கிரான் விடுதி, தஞ்சாவூர். 4) மூ. சுகந்தி வெள்ளையன் தெரு, சோழகன்கரை, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 5) தி. தேன்மொழி தெற்கு தெரு, திப்பியக்குடி, பாப்பநாடு, ஒரத்தநாடு, தஞ்சாவூர்.

வல்லம் பேரூர்

அமைப்பாளர் - அ. சரோஜினி அன்பு நகர், வல்லம், தஞ்சாவூர் - 613403. துணை அமைப்பாளர்கள் - 1) ச. அன்புச்செல்வி தெற்கு காமாட்சியம்மன் கோவில் தெரு, வல்லம், தஞ்சாவூர். 2) கோ. மேனகா ரெட்டிபாளையம் ரஸ்தா, வல்லம், தஞ்சாவூர். 3) ஆ. சத்தியா அண்ணா நகர், வல்லம், தஞ்சாவூர்.

திருவையாறு பேரூர்

அமைப்பாளர் - மு. நாகரெத்தினம் திருமஞ்சனவீதி, திருவையாறு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) மு. சுமதி பருத்திக்குடி,திருவையாறு, தஞ்சாவூர். 2) தொ. ஜெயசீலி தமிழர்மேட்டுத்தெரு, திருவையாறு, தஞ்சாவூர். 3) பா. புவனா வடக்குவீதி, திருவையாறு, தஞ்சாவூர்.

மேலத்திருப்பூந்துருத்தி பேரூர்

அமைப்பாளர் - ரா. ஸ்ருதிகா புதுக்காலனி, மேலத்திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) கோ. தமிழ்செல்வி காளியம்மன் கோவில் தெரு, மேலத்திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர். 2) செ. கோகிலா புதுத் தெரு, மேலத்திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர். 3) செ. ராதிகா பெரிய தெரு, மேலத்திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர்.

திருக்காட்டுப்பள்ளி பேரூர்

அமைப்பாளர் - க. தனலெட்சுமி மார்க்கெட் குறுக்கு தெரு, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர் - 613104. துணை அமைப்பாளர்கள் - 1) மா. செந்தாமரை லயன்கரை, திருக்காட்டுப்பள்ளி தஞ்சாவூர். 2) ரா. எஸ்தர் கிறிஸ்துவத் தெரு, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர். 3) ஆர். வாசுகி ஆதிதிராவிடர் தெரு, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர்.

ஒரத்தநாடு பேரூர்

அமைப்பாளர் - கா. சுஜாதா தெலுங்குத் தெரு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) மு. கபிபுனிஷா தெற்கு முஸ்லீம் தெரு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 2) பா. வேணி கம்மாளத் தெரு, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 3) அ. சாந்தகுமாரி ராயர் தெரு, ஒரத்தநாடு, தஞ்சாவூர்.

தஞ்சை மாநகரம்

மருத்துவக்கல்லூரி பகுதி

அமைப்பாளர் - ஜீவமணி 4வது தெரு, பெரியார் நகர், எம். சி. ரோடு, தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) கே. அறிவுச்செல்வி பாண்டியன் நகர், எம்.சி. ரோடு, தஞ்சாவூர். 2) எஸ். அகிலா சிவாஜி நகர், எம்.சி. ரோடு, தஞ்சாவூர். 3) எம். மேரி கீழத் தெரு, கணபதி நகர், எம்.சி. ரோடு, தஞ்சாவூர். 4) சு. வித்யா டி.பி.எஸ்.நகர், எம்.சி.ரோடு, தஞ்சாவூர். 5) அ. அன்புச்செல்வி 2வது தெரு, முனிசிபல் காலனி, எம்.சி. ரோடு, தஞ்சாவூர்.

கோட்டை பகுதி

அமைப்பாளர் - த. சசிகலா மேல அலங்கம், தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) ரா. தேன்மொழி பெருமாள் காலனி, பெரியசாலை, தஞ்சாவூர். 2) ரா. ராஜம் சேவப்பநாயக்கன்வாரி, சீனிவாசபுரம், தஞ்சாவூர். 3) பர்ஜனாபேகம் சக்கநாயக்கன் தெரு, சாஜிதா மன்சில், தஞ்சாவூர். 4) க. ரம்யா மேட்டு எல்லையம்மன் கோவில் தெரு, ஆபிரகாம்பண்டிதர்ரோடு, தஞ்சாவூர். 5) ஜெ. நிஷாந்தி சவேரியார் கோவில் தெரு, ராத்தன்பாளையம், கீழவாசல், தஞ்சாவூர்.

கீழவாசல் பகுதி

அமைப்பாளர் - ஜெ. அமுதவள்ளி 1, தெரு, அன்புநகர், தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) ப. பார்வதி 3வது தெரு, காமராஜ் நகர், தஞ்சாவூர். 2) க. சாவித்திரி 3வது தெரு, அன்பு நகர், விளார் சாலை, தஞ்சாவூர். 3) மு. ரேவதி 3வது தெரு, காமராஜ் நகர், தஞ்சை மாவட்டம். 4) ரா. கீதா ஹந்திராயர் காலனி, கீழவண்டிக்காரத் தெரு, தஞ்சாவூர். 5) யூ. மரியா மிஷன் தெரு, கங்காணியார் தோட்டம், மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.

கரந்தை பகுதி

அமைப்பாளர் - அ. ஜீலியட்ராணி காவடிக்கார தெரு, கீழவாசல், தஞ்சாவூர். துணை அமைப்பாளர்கள் - 1) தி. வேம்பு குறிஞ்சி நகர் விரிவாக்கம், பாலபநந்தவனம், தஞ்சாவூர். 2) டி. பாப்பு பானு தென்றல்மதி இல்லம், பூமால், இராவுத்தர் கோவில் தெரு, கீழவாசல், தஞ்சாவூர். 3) வீ. விஜயா புண்ணியமூர்த்தி தோட்டம், வடக்கு வாசல், தஞ்சாவூர். 4) யோ. வள்ளி சீரேஷ்சத்திரம் ரோடு, வடக்கு வாசல், தஞ்சாவூர். 5) தி. கோகிலா சாலைக்காரத் தெரு, பழைய மாரியம்மன் கோவில் சாலை, கீழவாசல், தஞ்சாவூர்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13-03-2025.

ஜெ. ஹெலன்டேவிட்சன்,
செயலாளர்
தி.மு.க. மகளிர்அணி

அரியலூர் மாவட்டத்தில்

12 மகளிர் விடியல் பயண புதிய BSVI நகரப் பேருந்துகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர்,மார்ச், 16 அரியலூர் மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் சார்பில் 12 மகளிர் விடியல் பயண புதிய BSVI நகரப் பேருந்துகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை செயல்பட்டு வருகிறது. அதன்தொடர்ச்சியாக இன்றையதினம், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில் 04 மகளிர் விடியல் பயண புதிய BSVI நகரப் பேருந்துகளையும், அரியலூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் 08 மகளிர் விடியல் பயண புதிய BSVI நகரப் புதிய பேருந்துகளையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்;.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம், ஜெயங்கொண்டம் கிளை சார்பில் பேருந்து எண்.TN 45 N 4619 தடம் எண்.009A, ஜெயங்கொண்டம் அணைக்கரை உதயநத்தம் வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4578 தடம் எண்.003B, ஜெயங்கொண்டம் சுத்தமல்லி, தா.பழூர் வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4564 தடம் எண்.005A, ஜெயங்கொண்டம் காடுவெட்டி, ஆண்டிமடம் வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4594 தடம் எண்.018A, ஜெயங்கொண்டம் ஆர்.எஸ் மாத்தூர், செந்துறை வழியாகவும் 04 மகளிர் விடியல் பயண புதிய BSVI நகரப் பேருந்துகள் பொதுமக்கள், மாணவிகள், குடும்பத் தலைவிகள், வேலை நிமித்தமாக பயணம் மேற்கொள்ளும் பெண்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அரியலூர் நகராட்சி பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம், அரியலூர் மற்றும் குன்னம் கிளைகளின் சார்பில் பேருந்து எண்.TN 45 N 4579 தடம் எண்.001A, அரியலூர் ஓரியூர், சுண்டக்குடி வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4631 தடம் எண்.003A, அரியலூர் முட்டுவாஞ்சேரி, வி.கைகாட்டி வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4642 தடம் எண்.003B, அரியலூர் முட்டுவாஞ்சேரி, வி.கைகாட்டி வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4615 தடம் எண்.005A அரியலூர் வைப்பூர், பெரிய திருக்கோணம் வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4559 தடம் எண்.006A அரியலூர் கோட்டியால், சுத்தமல்லி வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4575 தடம் எண்.008A அரியலூர் கொட்டரை, தொண்டபாடி வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4557 தடம் எண்.013A அரியலூர் ஆர்.எஸ்.மாத்தூர், செந்துறை வழியாகவும், பேருந்து எண்.TN 45 N 4628 தடம் எண்.014A அரியலூர் இரும்புலிக்குறிச்சி, செந்துறை வழியாகவும் 08 மகளிர் விடியல் பயண புதிய BSVI நகரப் பேருந்துகள் மகளிர் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) நிர்வாக இயக்குநர் இரா.பொன்முடி, திருச்சி மண்டல பொது மேலாளர் ஆ. முத்துகிருஷ்ணன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், கோட்ட மேலாளர் பெரம்பலூர் புகழேந்திராஜ், அரியலூர் கிளை மேலாளர் குணசேகரன், ஜெயங்கொண்டம் கிளை மேலாளர் ராஜா, அரியலூர் நகர்மன்ற துணைத்தலைவர் கலியமூர்த்தி, ஜெயங்கொண்டம் நகர்மன்ற துணைத்தலைவர் வெ.கொ.கருணாநிதி, அரியலூர் வட்டாட்சியர் முத்துலெட்சுமி. ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் சம்பத்குமார், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திர சேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா. மணிமாறன், ரெங்க.முருகன், பூ.செல்வராஜ், மா. அன்பழகன், கோ. அறிவழகன், ஆர்.கலியபெருமாள், நகர செயலாளர் இரா.முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மத்திய சங்க பொதுச் செயலாளர் குணசேகரன், மத்திய சங்க தலைவர் டி. சேகர், அரியலூர் தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், மாவட்ட தொழிற் சங்க நிர்வாகிகள் கொளஞ்சி, செல்வம், குமார், மைனர், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச.

கடலூர் மண்டலம் (பதிவு எண். 218/CDR, பேரவை இணைப்பு எண். 1002) நிர்வாகிகள் தேர்தல்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. கடலூர் மண்டலத்தின் (பதிவு எண் 218/CDR. பேரவை இணைப்பு எண். 1002) நிர்வாகிகள் தேர்தலை நடத்திட **மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் திரு. சி.கருணாநிதி** அவர்கள் தேர்தல் ஆணையாளராகவும். துணை ஆணையாளராக **பேரவைச் செயலாளர் திரு. எம். சிவப்பிரகாசம்** ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள். கடலூர் மண்டலத்தில் உள்ள கிளைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் குறித்த அட்டவணை கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் கால அட்டவணை

கிளைச் சங்க நிர்வாகிகள் தேர்தல்

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (கிளைகள் தோறும்) - 24.03.2025 காலை 10.00 மணி

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (கிளைகள் தோறும்) - 27.03.2025 காலை 10.00 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் - 27.03.2025 மதியம் 12.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

வேட்பு மனுத்தாக்கல் - 29.03.2025 காலை 8.00 மணி முதல் காலை10.00 மணி வரை

வேட்பு மனு பரிசீலனை - 29.03.2025 காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 29.03.2025 மதியம் 1.00 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல் - 29.03.2025 மதியம் 1.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் - 29.03.2025 மாலை 4.00 மணி

வாக்குப் பதிவு - 01.04.2025 அன்று போட்டி உள்ள கிளை களில் தேர்தல் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்!

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 02.04.2025 காலை 10.00 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் - 02.04.2025 காலை 10.30 மணி முதல் காலை 12.00 மணி வரை

வேட்பு மனுத்தாக்கல் - 02.04.2025 மதியம் 12.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

வேட்பு மனு பரிசீலனை - 02.04.2025 மதியம் 2.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை

தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 02.04.2025 மதியம் 3.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல் - 02.04.2025 மதியம் 3.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை

இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் - 02.04.2025 மாலை 6.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு - 03.04.2025 காலை 11.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை

கிளைச் சங்கத் தேர்தலுக்கான வேட்புமனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் ஆகியவை மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும். கிளைச் சங்கத்திற்கு போட்டி இருந்தால் அந்தந்த கிளைகளின் அருகில் ஒதுக்கப்பட்ட இடத்தில் வாக்குப்பதிவு நடத்தி, வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு உடனே முடிவுகள் அறிவிக்கப்படும்.

மத்திய சங்க தேர்தல் வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், வேட்பு மனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், வாக்குப் பதிவு, வாக்கு எண்ணிக்கை, முடிவு அறிவித்தல் ஆகியவை மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

ஆணையாளரின் முடிவே இறுதியானது.

இடம்: கலைஞரகம்
14.03.2025

மு.சண்முகம் எம்.பி.
பொதுச் செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

ஓசூர் மாநகரில் பொதுக்கூட்டம்!

மேயர் சத்யா தலைமை! ஒய்.பிரகாஷ் – சே.மெ.மதிவதனி சிறப்புரை!

கிருஷ்ணகிரி, மார்ச். 16-

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் மாநகர திமுக சார்பில் கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக இன்னிசை நிகழ்ச்சி, மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் எஸ். ஏ. சத்யா தலைமையில் நடைபெற்ற பொதுகூட்டத்தில் மாநகர அவைத் தலைவர் செந்தில் குமார் வரவேற்புரை ஆற்றினார்.

மாநகர துணை செயலாளர் கோபாலகிருஷ்ணன், ரவிக்குமார், சாந்தி, மாநகரப் பொருளாளர் தியாகராஜன் , பகுதி கழக செயலாளர்கள் ஆனந்தையா , திம்மராஜ், ஒன்றிய செயலாளர் கஜேந்திரமூர்த்தி , மண்டல குழு தலைவர்கள் ரவி, காந்திமதி , மாநகராட்சி சுகாதாரக் குழு தலைவர் மாதேஸ்வரன், முன்னாள் நகர செயலாளர்கள் நாகராஜ் , குருசாமி

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், திராவிடர் கழக மாநில துணை பொதுச் செயலாளர் மதிவதனி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள். இந்த பொதுக் கூட்டத்தில் பேசிய மதிவதனி லண்டனில் உள்ள ஒரு பேராசிரியர், ஆய்வாளர் கிரிஸ்டோபர் கூறுகிறார் இந்தியாவுக்கு என்று ஒரு மாடல் இருக்க வேண்டும் என்றால் அது தமிழ் நாடு மாடலாக தான் இருக்க முடியும் எனக்கூறி உள்ளார். இந்திய அரசியலமைப்பு சட்டப்படி நாடாளுமன்றத்தில் நாட்டில் வாழும் அனைவருக்காகவும் குரல் எழுப்ப முடியும் தமிழகத்தில் உள்ள 39 எம்.பி.க்களும் டீ குடிக்க தான் வருகிறார்கள் என்று கிண்டல் அடித்தார்கள்.

ஆனால் இன்று நமது எம்.பி.க்கள் மரியாதையாக பதில் சொல்லுங்கள் என்று கேள்வி எழுப்புகின்றனர். ஆற்றல் வாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் இருந்து போயிருக்கிறார்கள். பொதுக்கூட்டம் போட்டு திட்டுகிறீர்கள் தமிழக சட்டமன்றத்திலும் தீர்மானம் போட்டு நெருக்கடி கொடுக்கிறீர்கள் நாடாளுமன்றத்திலும் வந்து பேசுகிறீர்கள் உங்களது குரல் வளையை நசுக்குகிறோம் என்று பாஜக அரசு செய்திருக்கக்கூடிய முடிவுதான் மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பது ஆகும். அப்படி மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தால் ஏற்கனவே தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதிகளில் 10 முதல் 12 நாடாளுமன்ற தொகுதிகள் குறையும் என்றார்.

மக்கள் தொகையை குறைக்க வேண்டும் என்று அவர்கள் கூறிய போது இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலும் அந்த திட்டத்தை நடைமுறை படுத்தவில்லை அதை மதித்து நிறைவேற்றிய ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும்தான். அதற்கு தண்டனையாகத் தான் நாடாளுமன்ற உறுப்பினர்களை குறைக்க போகிறோம் என்று தற்போது கூறுகிறார்கள். நமது முதல்வருக்கு மட்டும்தான் இது புரிந்தது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, ஒரிசா, மேற்குவங்காளம் என 7 மாநில முதல்வர்களை தமிழ்நாட்டின் முதலமைச்சர் தட்டி எழுப்பி உள்ளார். இந்த 7 மாநிலங்களும் தொகுதி மறு சீரமைப்பு எதற்கு என குரல் எழுப்ப இருக்கிறார்கள் அந்தக் குறலுக்கு சொந்தக்காரர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான். இத்தனையும் செய்து உங்களுடைய பிள்ளைகளின் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை காப்பாற்றி வருகிறார் என பேசினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில சிறுபான்மை அணி துணை செயலாளர் விஜயகுமார், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஞானசேகரன், மாவட்ட நிர்வாகிகள் ஜெயராமன் ,தனலட்சுமி , சீனிவாசன், முனிராஜ் ,அருணா பூசன் குமார், அப்துல் கலாம் , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன் உள்ளிட்ட மாவட்ட , மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் ,தலைவர்கள்,துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் பகுதி செயலாளர் வெங்கடேஷ் நன்றி உரையாற்றினார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பனகல்சாலை பொதுவிநியோகஅங்காடி, மாநில நிதிக்குழுவிலிருந்து கட்டப்பட்ட கே.டி.ஆர். நகராட்சி பள்ளி புதிய வகுப்பறை ஆகியவற்றை பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்துவைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் மோகன கிருஷ்ணன்,நகர்மன்ற தலைவர் புவனப்ரியா, நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில்,மாநில விவசாய அணி துணை செயலாளர் இரா. சங்கர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தஞ்சை மாவட்டம் பேராவூரணி சட்ட மன்ற தொகுதி சித்துக்காடு கிராமத்தைச் சேர்ந்த அரசு உயர்நிலைப்பள்ளியில் 9 ம் வகுப்பு பயிலும் நித்திய ஸ்ரீ வீட்டிற்கு நேரில் சென்று விபரங்களை கேட்டறிந்து மாணவியின் குடும்பத்தினருக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்கியும், நிதியுதவி வழங்கியும் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி விரைவில் வீட்டிற்கு மின் இணைப்பு கிடைத்திடவும், மாணவியின் உயர் கல்விக்குத் தேவையான உதவிகளை செய்தார்.